**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 585/2025**
**Deposition of Witness for the Defendant – DW3**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **கணேசன்** | **Caste:** | |
| **Father Name** | **சடையப்பன்** | **தொழில்** | டெக்ஸ்டைல் தொழில் |
| **Village:** | **காமதேனு நகர்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 68 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 27.03.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3 வது பிரதிவாதி ஆவேன். வாதி எங்களுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை நானும், வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் கூட்டாக கிரயம் பெற்ற சொத்தாகும். தாவா சொத்தை கூட்டாக அனுபவிக்க முடியாது என்பதால், வாதி பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை எங்கள் நால்வரில் யாராவது ஒருவர் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அனைவரும் கூட்டாக வாதி தாவா சொத்தை முழுமையாக அனுபவிப்பதற்கும், நாங்கள் தொகையை வாதியிடம் இருந்து பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, ரூ. 20,00,000/ஐ வாதியிடமிருந்து வாங்கியதில், விகிதச்சாரப்படி ரூ.4,00,000/–ஐ நான் பெற்றுக்கொண்டேன். அதனால், வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்பதற்காக ஒத்திசைவு மனுவில் நான் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டேன். வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.